[2012 ஏப்ரல் 16

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை. அங்கே விளைநிலங்களின் விலை அதிகமாக உள்ள காரணத்தினால், பல்வேறு பொது நிகழ்ச்சிகளுக்கு இதுவரை கட்டடங்கள் கட்டுவதற்கோ, விளையாட்டு மைதானங்கள் அமைப்பதற்கோ நிலங்கள் கிடைப்பதில்லை; கையகப்படுத்த முடியவில்லை. ஆனாலும்கூட, அந்தப் பகுதியினுடைய வளர்ச்சியை முன்னோக்கி அந்தப் பகுதியிலும் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்குரிய நடவடிக்கையை எடுப்பதற்குத் தீவிரமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

93—

குழந்தைகள் உணவீட்டுச் செலவினம்

***4991—திரு. அ. அஸ்லம் பாஷா:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் அரசு மற்றும் தனியாரால் நடத்தப்படும் குழந்தைகள் காப்பகங்களில் குழந்தை ஒன்றுக்கு வழங்கப்படும் மாத உணவீட்டுத் தொகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

2012 ஏப்ரல் 16]

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்களில் தங்கிப் பயன்பெறும் 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு, ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 450/– வீதமும், 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ரூபாய் 550/– வீதமும் உணவீட்டுச் செலவினமாக வழங்கப்படுகிறது. அரசு மானியம் பெற்று தனியாரால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்களில் உள்ள குழந்தைகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 450/– வீதம் உணவீட்டுச் செலவினமாகத் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி இல்லங்களுக்குப் பராமரிப்பு உதவித் தொகையை உயர்த்தி வழங்க ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசிடமிருந்து நிதியுதவி கோரப்பட்டுள்ளது. மைய அரசு கொள்கை ரீதியாக ஒப்புக்கொண்டாலும், இன்னும் உறுதியான தகவல் ஏதுமில்லை. இந்தக் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, திருப்பத்தூரிலே குழந்தைகள் காப்பகம் ஒன்று இருக்கின்றது. சமூக நலத் துறையிலே பதிவு பெற்று, அங்கீகாரம் பெற்று பல்லாண்டுகளாக நடத்தி வருகின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒரு நபருக்கு 450/– ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால், அந்த நிருவாகத்தினர் ஒரு குழந்தைக்கு ரூபாய் 36/– மட்டுமே கொடுப்பதாக எனக்குத் தகவல் கொடுத்திருக்கின்றார்கள். எங்கே தவறு நடந்திருக்கிறது என்பது தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு, ஒருவேளை அங்கே ஏதாவது தவறு நடக்குமேயானால், அதைச் சீர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அஸ்லம் பாஷா அவர்கள், திருப்பத்தூர் என்று சொன்னார். அது தனியார் தொண்டு நிறுவனம் நடத்தக்கூடிய இல்லம் என்று கருதுகிறேன். அந்த இல்லத்தினுடைய பெயரைக் குறிப்பிட்டு, எவ்வளவு நாட்கள்

அந்த இல்லம் தொடர்ந்து நடைபெறுகிறது; எவ்வளவு நாட்கள் அந்தக் குழந்தைகளுக்குத் தரப்படவில்லை என்று தனியாகவோ அல்லது பேரவைத் தலைவர்மூலமாகவோ என்னிடத்தில் தந்தால், உடனடியாக அரசு அதனுடைய அங்கீகாரத்தை இரத்து செய்வதற்குக்கூட தயாராக இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா, அதற்குண்டான விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

வினா வரிசை எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

94—

தேயிலைத் தோட்டக் கழகம்

***176—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் உள்ள என்.இ.பி.சி., ஹைபாரஸ்ட், வேவர்லி ஆகிய நலிவடைந்த எஸ்டேட்டுகளைத் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் ஏற்று நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வால்பாறையில் உள்ள என்.இ.பி.சி., ஹைபாரஸ்ட், வேவர்லி ஆகிய நலிவடைந்த எஸ்டேட்டுகளில் உள்ள தேயிலைச் செடிகள் மிகவும் வயதானவையாகவும், நலிவடைந்தவையாகவும் உள்ளதாலும், தேயிலையின் மகசூலும், தரமும் குறைவாக இருக்கும்